**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**

**மேட்டூர் நகராட்சி**

நிகழும் ஸ்ரீ சுபகிருது வருடம் ஆடி மாதம் 15 ம் தேதி ஆங்கில ஆண்டு 31.07.2023ம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு மேட்டூர் நகர்மன்றத்தில் சாதாரண கூட்டம் நடைபெற உள்ளதால் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**நாள் : 24.07.2023**

**இடம்: மேட்டூர் அணை.** **நகர்மன்ற தலைவர்,**

**மேட்டூர் நகராட்சி.**

**மன்றப்பொருள்**

1. மேட்டூர் நகராட்சியில் பாதாள சாக்கடைத்திட்டப்பணிகள் மற்றும் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகளால் சேதமடைந்த சாலைகளை சீரமைப்பு செய்திட ரூ.1256.99 இலட்சம் மதிப்பிட்டில் சிறப்பு நிதி (special grant) 2023–2024ன் கீழ் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவில் அனுமதி பெறப்பட்டுள்ளது.நகராட்சி நிர்வாக இயக்குநர் சேலம் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்க்கு கீழ்கண்ட பணிகளின் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. பணிகளின் தொகுப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

1) மேட்டூர் நகராட்சியில் கீழ் குள்ளவீரன்பட்டி இரண்டாவது கிராஸ், கீழ் குள்ளவீரன்பட்டி முதல் கிராஸ், கீழ் குள்ளவீரன்பட்டி மாரியம்மன் கோவில் பின்புற சாலை, கீழ்குள்ளவீரன்பட்டி மேற்குப் பக்கம் 2வது குறுக்கு, கீழ் குள்ளவீரன்பட்டி 5வது குறுக்கு, நவக்கோவில் 5வது குறுக்கு, கீல் குள்ளவீரன்பட்டி பிரதான சாலை, குள்ளவீரன்பட்டி பூஸ்டர் ஸ்டேஷன் இறுதியில் கொளத்தூர் பிரதான சாலை இணைக்கும் சாலை, குள்ளவீரன்பட்டி மாரியம்மன் கோவில் வடக்குப் பக்கத் தெரு) குள்ளவீரன்பட்டி பிள்ளையார் கோவில் கிழக்குப் பக்கச் சாலை , குள்ளவீரன்பட்டி பிள்ளையார் கோவில் தெற்குப் பக்கத் தெரு குள்ளவீரன்பட்டி பிள்ளையார் கோவில் தெற்குப் பக்கத் தெரு தார் சாலை அமைத்தல் பணி மதிப்பீடு தொகை : 89.91 லட்சம் (தொகுப்பு–1)

2) மேட்டூர் நகராட்சியில் மருத்துவமனை காலனி மேற்குப் பக்கச் சாலை , குமரன் நகர் வடக்குப் பகுதி பொதுக் கழிப்பறை சாலை , குமரன் நகர் பிரதான சாலை மருத்துவமனை காலனியிலிருந்து குமரன் நகர் வடக்கு முனை வரை குமரன் நகர் பிரதான சாலை மருத்துவமனை காலனியிலிருந்து குமரன் நகர் வடக்கு வரை) திரு நகர் பிரதான சாலை 2வது குறுக்கு முதல் வெட்டு குமரன் நகர் பெரியார் படிப்பகம் சாலை குமரன் நகர் முனிசிபல் பள்ளி வடக்குப் பகுதி பிரதான மற்றும் குறுக்குத் தெருக்கள் திருநகர் பிரதான சாலை 1 வது குறுக்கு மருத்துவமனை காலனி 1வது குறுக்கு சாலை தெற்கு பக்கம் முதல் வெட்டு திரு நகர் மெயின் ரோடு மருத்துவமனை காலனி முதல் குறுக்குத் தெரு மருத்துவமனை காலனி பிள்ளையார் கோவில் தெரு (ஆர்) குமரன் நகர் வடக்குப் பக்க சாலை தார் சாலை அமைத்தல் மதிப்பீடு தொகை :93.51 லட்சம் (தொகுப்பு– 2)

3) மேட்டூர் நகராட்சியில் அண்ணா நகர் 1வது குறுக்கு மேட்டூர் ரயில் நிலைய சாலை மால்கோ கேட் முன் பக்கம் – மேற்கு பக்கம் மூன்றாம் வெட்டு மேட்டூர் ஆர்டிஓ அலுவலக சாலை தங்கமாபுரிபட்டினம் நகராட்சி பள்ளி முன் பக்க சாலை சேலம் கேம்ப் காவல் நிலையம் எதிரில் மேற்குப் பக்க சாலை ®சேலம் கேம்ப் மில் குவார்ட்டர்ஸ் மாரியம்மன் கோவில் மூன்றாம் குறுக்குத் தெரு மில் குவார்ட்டர்ஸ் இரண்டாவது குறுக்குத் தெரு மில் குவார்ட்டர்ஸ் முதல் குறுக்குத் தெரு சேலம் கேம்ப் மில்

குவார்ட்டர்ஸ் கழிவறை சாலை மேற்கிலிருந்து கிழக்குப் பக்கம் சேலம் கேம்ப் காமராஜ் நகர் முதல் குறுக்குத் தெரு சேலம் கேம்ப் காமராஜ் நகர் இரண்டாவது குறுக்குத் தெரு சேலம் கேம்ப் காமராஜ் நகர் மூன்றாவது குறுக்குத் தெரு சேலம் கேம்ப் காமராஜ் நகர் நான்காவது குறுக்குத் தெரு சேலம் கேம்ப் மாடி லைன் டவுன் பக்கம்– கிழக்குப் பக்கம் முதல் தெரு சேலம் கேம்ப் மாடி லைன் டவுன் சைட்– கிழக்குப் பக்கம் முதல் தெரு சேலம் கேம்ப் மாடி லைன் கிழக்கு முதல் வடக்குப் பக்க சாலை) தார் சாலை அமைத்தல் மதிப்பீடு தொகை :95.91 லட்சம்

4) மேட்டூர் நகராட்சியில் பெரிய மாரியம்மன் கோவில் காம்பவுண்ட் பின்புற சாலை தங்கமாபுரிபட்டினம் அண்ணா நகர் சாலை தங்கமாபுரிபட்டினம் காந்தி பார்க் சாலை தங்கமாபுரிப்பட்டினம் கிழக்குப் பகுதி எஸ்.பி அர்த்தனாரி தெரு, வடக்கு மற்றும் தெற்கு தெரு தங்கமாபுரிபட்டினம் காந்தி பூங்கா தெற்குப் பக்க சாலை. மைக்கோ பண்ணை மேற்குப் பக்கச் சாலை முதல் பிரதான சாலை வரை தங்கமாபுரிப்பட்டினம் பொதுக் கழிப்பறை சாலை தங்கமாபுரிப்பட்டினம் கிழக்கு முதல் தெரு தங்கமாபுரிப்பட்டினம் தபால் அலுவலகத் தெரு தங்கமாபுரிப்பட்டினம் கிழக்குப் பக்கம் இரண்டாவது தெரு தங்கமாபுரிபட்டினம் சின்ன மாரியம்மன் கோயில் சாலை வரை தங்கமாபுரிப்பட்டினம் கிழக்குப் பகுதி பிரதான மற்றும் குறுக்குத் தெரு தங்கமாபுரிப்பட்டினம் சின்ன மாரியம்மன் தெற்குப் பக்க வீதி தங்கமாபுரிப்பட்டினம் சின்ன மாரியம்மன் கோவில் தெற்குப் பக்கம் இரண்டாவது குறுக்குத் தெரு தங்கமாபுரிபட்டினம் சின்ன மாரியம்மன் கோவில் தெற்குப் பக்கம் முதல் குறுக்குத் தெரு தங்கமாபுரிப்பட்டினம் தெற்கிலிருந்து வடக்கு தங்கமாபுரிப்பட்டினம் சொசைட்டி கிரவுண்ட் கட் சாலை தெற்கிலிருந்து வடக்கு இரண்டாவது வெட்டு தங்கமாபுரிபட்டினம் கிழக்குப் பக்கத் தெரு தங்கமாபுரிப்பட்டினம் சொசைட்டி கிரவுண்ட் கட் சாலை தெற்கிலிருந்து வடக்கு முதல் வெட்டு தங்கமாபுரிபட்டினம் மேற்குப் பகுதி பிரதான மற்றும் குறுக்குத் தெரு மேட்டூர் நகராட்சியில் தங்கமாபுரிப்பட்டினம் சொசைட்டி கிரவுண்ட் வடக்குப் பக்கத் தெரு தார் சாலை அமைத்தல் மதிப்பீடு தொகை: 96.92 லட்சம் (தொகுப்பு–4)

5) மேட்டூர் நகராட்சியில் மைக்கோ பண்ணை முன் பக்க சாலை முருகன் கோவில் பின்புறம் சாலை தங்கமாபுரிபட்டினம் கழிப்பறை இருந்து சந்தை இணைக்கும் சாலை தங்கமாபுரிபட்டினம் சொசைட்டி வீடு மெயின் மற்றும் குறுக்கு தெரு வெட்டு சாலை தங்கமாபுரிபட்டினம் சொசைட்டி வீடு தெற்கு பக்க சாலை அருகே தங்கமாபுரிபட்டினம் சொசைட்டி வீடு நகர் கிழக்கு பக்கம் முதல் தெரு தங்கமாபுரிப்பட்டினம் பெரியார் நகர் நான்காவது தெரு தங்கமாபுரிபட்டினம் 3வது மற்றும் 4வது தெரு தங்கமாபுரிபட்டினம் பெரியார் நகர் மேற்கு பக்கம் 1வது குறுக்குத் தெரு கிழக்கிலிருந்து மேற்காக தங்கமாபுரிபட்டினம் பெரியார் நகர் மேற்குப் பகுதியிலிருந்து தெற்கே சாலை 2வது குறுக்குத் தெரு. தங்கமாபுரிபட்டினம் பெரியார் நகர் தெற்குப் பக்கம்– கிழக்கிலிருந்து மேற்குப் பக்கச் சாலை தங்கமாபுரிப்பட்டினம் பெரியார் நகர் மேற்குப் பக்கம் பிரதான மற்றும் குறுக்குத் தெருக்கள் தங்கமாபுரிபட்டினம் பெரியார் நகர் மேற்குப் பக்கம் மூன்றாம் குறுக்கு – கிழக்கிலிருந்து மேற்குப் பக்கச் சாலை தங்கமாபுரிபட்டினம் பெரியார் நகர் மேற்குப் பக்கம் மூன்றாம் குறுக்கு – கிழக்கிலிருந்து மேற்குப் பக்கச் சாலை முனிசிபாலிட்டி தார் சாலை அமைத்தல் மதிப்பீடு தொகை: 68.96 லட்சம் (தொகுப்பு –5)

6) மேட்டூர் நகராட்சியில் சேலம் கேம்ப் ஆட்டோ இருதய சாமி தெரு பின்புற சாலை சேலம் முகாம் காமராஜ் நகர் தெற்குப் பக்கம் இரண்டு தெருக்கள் சேலம் கேம்ப் காமராஜ் நகர் முதல் குறுக்கு கிழக்குப் பக்கம் சேலம் கேம்ப் காமராஜ் நகர் மூன்றாம் குறுக்கு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் II சாலை கேம்ப் காமராஜ் நகர் நான்காவது குறுக்குத் தெரு கழிப்பறை சாலை சேலம் கேம்ப் காந்தி நகர் முதல் தெரு சேலம் கேம்ப் காந்தி

நகர் இரண்டாவது தெரு சேலம் கேம்ப் காந்தி நகர் மாரியம்மன் கோயில் மேற்குப் பக்கம் இரண்டாவது குறுக்குத் தெரு சேலம் கேம்ப் காந்தி நகர் மூன்றாவது தெரு சேலம் முகாம் காந்தி நகர் மாரியம்மன் கோயில் மேற்குப் பக்கம் முதல் குறுக்கு மேற்குப் பக்கம் குறுக்கு சாலை சேலம் கேம்ப் காந்தி நகர் நான்காவது தெரு சேலம் கேம்ப் காந்தி நகர் புதைகுழி மேற்குப் பக்கச் சாலை சேலம் கேம்ப் காந்தி நகர் சமுதாயக் கூடம் சாலை காந்தி நகர் ஸ்கேன்வெஞ்சர் குடியிருப்பு முதல் புதைகுழி சாலை தார் சாலை அமைத்தல் மதிப்பீடு தொகை: 92.35 லட்சம் (தொகுப்பு–6)

7) மேட்டூர் நகராட்சியில் காந்தி நகர் பூங்கா வடக்குப் பக்க தெரு குறுக்கு சாலை சேலம் கேம்ப் சாஸ்திரி நகர் கிழக்கு கடைசி தெரு சாஸ்திரி நகர் புதைகுழி சாலை சாஸ்திரி நகர் முதல் குறுக்குத் தெரு சாஸ்திரி நகர் இரண்டாவது குறுக்குத் தெரு சேலம் முகாம் அம்பேத்கர் நகர் மற்றும் அண்ணா நகர் சாலை சேலம் முகாம் அம்பேத்கர் நகர் குறுக்குத் தெரு சேலம் கேம்ப் அம்பேத்கர் நகர் மாரியம்மன் கோயில் பின்புற சாலை அம்பேத்கர் நகர் தெற்கு மற்றும் பொது கழிப்பறை சாலை பிள்ளையார் கோவில் 4வது குறுக்குத் தெரு தார் சாலை அமைத்தல் மதிப்பீடு தொகை : 76.63 லட்சம் (தொகுப்பு–7)

8) மேட்டூர் நகராட்சியில் இந்திரா நகர் PWD குடியிருப்புகள் 1வது குறுக்குத் தெரு இந்திரா நகர் PWD குடியிருப்பு 2வது குறுக்குத் தெரு இந்திரா நகர் செல்லாண்டியம்மன் கோயில் பின்புறத் தெரு தொலைபேசி சாலை PWD குவாட்டர்ஸ் சாலை–2 EB குவார்ட்டர்ஸ் ரோடு கூலி லைன் டாய்லெட் வடக்குப் பக்க சாலை பழைய மார்க்கெட் இரண்டாவது கிராஸ் பழைய மார்க்கெட் மூன்றாவது கிராஸ் ஜட்ஜ் குடியிருப்புகள் எதிரில் பக்க சாலை டிஎன்இபி குவார்ட்டர்ஸ் தெற்குப் பக்க சாலை நகராட்சி குடியிருப்பு சாலை பொன்னகர் டாக்டர் சந்திரசேகர் தெரு நேதாஜி நகர் வடக்கு பக்கம் 1வது குறுக்கு தெரு பொன்னகர் மேற்கு பக்கம் 1வது குறுக்கு தெரு தார் சாலை அமைத்தல் மதிப்பீடு தொகை: 90.94 லட்சம் (தொகுப்பு–8)

9) மேட்டூர் நகராட்சியில் பொன்னகர் மேற்கு பக்கம் 2வது தெரு பொன்னநகர் மேற்கு பக்கம் 3வது தெரு கீழ் குள்ளவீரன்பட்டி மேற்கு பக்கம் மூன்றாம் குறுக்கு பொன்னகர் மேற்கு பக்கம் முதல் மற்றும் இரண்டாவது குறுக்கு இணைக்கும் சாலை நேதாஜி நகர் மேற்கு பக்கம் இணைக்கும் சாலை நேதாஜி நகர் முதல் வி.பி.கே நகர் இணைப்புச் சாலை நேதாஜி நகர் முதல் பாரதி நகர் பாலம் பாரதி நகர் பிரதான மற்றும் குறுக்குத் தெருக்கள் பாரதி நகர் 3வது குறுக்கு சாலை தார் சாலை அமைத்தல் மதிப்பீடு தொகை: 98.68 லட்சம் (தொகுப்பு– 9)

10) மேட்டூர் நகராட்சியில் காளியம்மன் கோவில் மேற்குப் பக்கச் சாலை பொன்னகர் பிரதான சாலை–தெற்குப் பக்கச் சாலை கருப்பையா மூப்பனார் நகர் தெற்குப் பக்கச் சாலை அண்ணாநகர் மெயின் மற்றும் குறுக்குத் தெருக்கள் இந்திரா நகர் தெற்குப் பக்கம் முதல் குறுக்குத் தெரு இந்திரா நகர் ஆற்றின் பக்கம் கடைசி தெரு முதல் செல்லாண்டியம்மன் கோவில் வரை தூக்காணம்பட்டி நகராட்சி ஐபி சாலை தூக்காணம்பட்டி டிஎன்இபி காலாண்டு மேற்கு பக்க தெரு தூக்காணம்பட்டி முதல் குறுக்கு தார் சாலை அமைத்தல் மதிப்பீடு தொகை : 62.31 லட்சம்(தொகுப்பு–10)

11) மேட்டூர் நகராட்சியில் காவேரி நகர் இஎஸ்ஜகாளியப்பன் வீடு வடக்குப் பக்க சாலை 2வது குறுக்கு உழவர் சாந்தை பின்புற சாலை பியூன் குடியிருப்பு அய்யப்பன் கோயில் வடக்குத் தெரு பெரியண்ண கவுண்டர் நகர் இரண்டாம் குறுக்குத் தெரு பெரியார் நகர் மற்றும் வி.பி.கே நகர் 4வது குறுக்கு இணைக்கும் தெரு பெரியார் நகர் வி.பி.கே நகர் 3வது குறுக்குத் தெருவை இணைக்கிறது பெரியார் நகர் முதல் வி.பி.கே நகரை இணைக்கும் 2வது குறுக்குத் தெரு பெரியார் நகர் முதல் வி.பி.கே நகர் வரை இணைக்கும் 1வது குறுக்குத் தெரு நேரு நகர் புதைகுழி தெற்குப் பக்க சாலை தார் சாலை அமைத்தல் மதிப்பீடு தொகை : 96.97 லட்சம் (தொகுப்பு–11)

12) மேட்டூர் நகராட்சியில் இடுகாடு கிழக்குப் பக்க சாலை திலகர் நகர் பிரதான சாலை சௌரியம்மாள் நகர் பிரதான சாலை தெற்குப் பக்கத்திலிருந்து வடக்குப் பக்கத் தெரு சௌரியம்மாள் நகர் குறுக்குத் தெருக்கள் முதல் குறுக்கு தெரு சௌரியம்மாள் நகர் குறுக்குத் தெரு சம்மனின் கோட்டை குறுக்குத் தெரு சம்மனின் கோட்டைத் தெரு ராஜகணபதி நகர் 3வது தெரு ராஜகணபதி நகர் கிழக்குப் பக்கம் நுழைவாயில் சரோஜா தியேட்டர் முன் பக்க சாலை சேவிகவுண்டர் நகர் மெயின் மற்றும் கிராஸ் ரோடு சக்தி நகர் தெற்குப் பக்கம் மேட்டூர் நகராட்சியில் முதல் தெரு தார் சாலை அமைத்தல் மதிப்பீடு தொகை: 95.27 லட்சம் (தொகுப்பு–12)

13) மேட்டூர் நகராட்சியில் சக்தி நகர் தெற்குப் பக்கம் இரண்டாவது தெரு சக்தி நகர் தெற்குப் பக்கம் மூன்றாவது தெரு சக்தி நகர் தெற்குப் பக்கம் நான்காவது தெரு மாதையன்குட்டை எலிகரடு நடுத் தெரு மாதையன்குட்டை வடக்குப் பக்க பிரதான சாலை முதல் குறுக்குத் தெருக்கள் மாதையன்குட்டை வடக்குப் பக்க பிரதான சாலை 2வது குறுக்குத் தெருக்கள் மாதையன்குட்டை எலிகரடு வடக்குப் பக்கம் 2வது குறுக்கு அம்மன் நகர் பெரியார் தெரு ஆண்டிகவுண்டர் நகர் தெற்குப் பக்க சாலை மாதையன்குட்டை மேட்டசாலை வடக்குப் பக்க சாலை மைக்கல் தோட்டம் மெயின் ரோடு தார் சாலை அமைத்தல் மதிப்பீடு தொகை :98.92 லட்சம் (தொகுப்பு–13)

14) மேட்டூர் நகராட்சியில் ஸ்டேட் பேங்க் பின்புறம் முல்லை நகர் மெயின் ரோடு ஸ்டேட் பேங்க் பின்புறம் முல்லை நகர் முதல் குறுக்குத் தெரு ஸ்டேட் பேங்க் பின்புறம் முல்லை நகர் இரண்டாவது குறுக்குத் தெரு ஸ்டேட் பேங்க் பின்புறம் முல்லை நகர் மூன்றாவது குறுக்குத் தெரு ஹவுசிங் போர்டு வடக்குப் பக்க மெயின் ரோடு ஹவுசிங் போர்டு வடக்குப் பக்கம் மெயின் ரோடு முதல் கிராஸ் ஹவுசிங் போர்டு குவார்ட்டர்ஸ் கடைசி தெரு ஹவுசிங் போர்டு தெற்கே ஜீவா நகர் மெயின் ரோடு ஹவுசிங் போர்டு வடக்குப் பக்கம் மெயின் ரோடு முதல் குறுக்கு முதல் குறுக்கு சாலை மாதையன்குட்டை இடுகாடு சாலை எம்ஜிஆர் நகர் முதல் குறுக்கு இரண்டாவது தெரு எம்ஜிஆர் நகர் முதல் தெரு முதல் குறுக்கு சாலை,தார் சாலை அமைத்தல் மதிப்பீடு தொகை: 99.73 லட்சம் (தொகுப்பு–1)

அலுவலக குறிப்பு

நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்க்கு கடிதம் அனுப்பியதை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண். 2103/2023/இ1)**

**தீர்மான எண். 379 நாள்.31.07.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

**2.** இந்நகராட்சியின் 2019-2020 ஆம் ஆண்டுக்கான தணிக்கைக் கட்டணம் ரூ.1,18,498/-ம் 2020-2021 ஆம் ஆண்டுக்கான தணிக்கைக் கட்டணம் ரூ.1,66,957/-ம் மற்றும் 2021-2022 ஆம் ஆண்டுக்கான தணிக்கைக் கட்டணம் ரூ.2,37,455/- ஆக மொத்தம் ரூ.5,22,910/- தணிக்கைத் துறைக்கு செலுத்தப்பட வேண்டி உள்ளது. எனவே மேற்படி தொகை ரூ.5,22,910/- ஐ அரசுக் கணக்கில் செலுத்திடவும், அதற்காகும் தொகையை பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 147/1999/அ2)**

**தீர்மான எண். 380 நாள்.31.07.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

**3.** இந்நகராட்சிக்குச் சொந்தமான மேட்டூர் கேம்ப் தினசரி மார்க்கெட்டில் IDSMT திட்டத்தில் கட்டப்பட்டு காலியாக உள்ள கடைகளுக்கு **15.06.2023**ல் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஏலம் கோர

எவரும் முன்வரவில்லை. கடை எண்.18க்கு மட்டும் கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை ( பிரதி மாத வாடகை ) |
|---|---|---|
| 1. | திரு.எம்.மகேந்திரன் மாது,<br>36, காவேரி பாலம்,<br>மீனவர் தெரு,<br>மேட்டூர் அணை. | ரூ.4,150/- |
| 2. | திரு.எம்.பத்மாவதி மனோகரன்,<br>128/1A-16, காவேரி நகர்,<br>மேட்டூர் அணை. | ரூ.4,100/- |

**அலுவலகக் குறிப்பு**

மேற்படி கடை எண்.18க்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.எம்.மகேந்திரன் மாது, மேட்டூர் அணை என்பவர் அதிகபட்சமாக மாதம் ஒன்றுக்கு வாடகையாக ரூ.4,150/- க்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகையானது நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் தலைமையிலான கண்காணிப்புக் குழுவால் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகைத் தொகை ரூ.4,000/- யை விட ரூ.150/- அதிகமாக உள்ளது. எனவே உயர்ந்த தொகை கோரிய திரு.எம்.மகேந்திரன் மாது, மேட்டூர் அணை அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகையை ரூ.4,150/- யை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 6232/2006/அ2)**

**தீர்மான எண். 381 நாள்.31.07.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

**4.** துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், சேலம் அவர்களின் கடிதத்தில் சேலம் மாவட்டத்தில் டெங்கு கொசுப்புழு வளர் நிலைகள் அதிகரித்து வருகிறது எனவும், டெங்கு காய்ச்சல் பரவாமலும், அதிகரிக்காமலும் தடுக்கவும், டெங்கு கொசுப்புழு தடுப்பு பணி செய்து குறைக்க ஜூலை 2023 மாதத்திலிருந்து தேவையான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனவும், தற்பொழுது பூச்சிகளால் பரவக்கூடிய மலேரியா, டெங்கு, சிக்கன் குனியா போன்ற நோய்கள் பரவாமல் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் தற்காலிகமாக 30 களப்பணி பணியாளர்களை நியமனம் செய்து பணியாற்ற தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும், டெங்கு நோய் பரவாமல் தடுக்கவும், களப்பணி பணியாளர் நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், சேலம் அவர்களால் 2022–2023 ஆம் ஆண்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி ரூ.429/– வீதத்தில் 30 களப்பணி பணியாளர்களை தற்போது டெங்கு தடுப்பு பணி செய்து வரும் நவரத்தினம் சுய உதவிக்குழு மூலம் 01.07.2023 முதல் 31.12.2023 முடிய ஆறு மாத காலங்களுக்கு டெங்கு தடுப்பு பணி மேற்கொள்ளலாம் எனவும் துப்புரவு ஆய்வாளர் மற்றும் துப்புரவு அலுவலர் தனது 30.06..2023––ம் தேதிய அறிக்கையில் தெரிவித்துள்ளனர். எனவே, 30 களப்பணி பணியாளர்களை நவரத்தினம் சுய உதவிக்குழு மூலம் 01.07.2023 முதல் 31.12.2023 முடிய ஆறு மாத காலங்களுக்கு டெங்கு தடுப்பு பணிக்கு பயன்படுத்திக்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.20.00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1431/2020/எச்1)

**தீர்மான எண். 382 நாள்.31.07.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

**5.** மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நாளொன்றுக்கு சராசரியாக 100 கிலோவிற்கு அதிகமாக திடக்கழிவுகளை உருவாகுபவர்கள் அல்லது 5000 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டிடங்களை பயன்படுத்தும் மத்திய அரசுத்துறை நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், மருத்துவமனைகள், மருத்துவ சிகிச்சை நிலையங்கள், பள்ளிகள், கல்லூரிகள், இதர கல்வி நிறுவனங்கள், மாணவர் விடுதிகள், வர்த்தக நிறுவனங்கள் (ஷாப்பிங் மால்கள்), வழிபாட்டு தலங்கள், விளையாட்டு அரங்குகள், விளையாட்டு வளாகங்கள், துணி விற்பனையாளர்கள், உணவு விடுதிகள், வியாபார நிறுவனங்கள் நகராட்சி அலுவலகத்தை அணுகி பதிவு செய்து தங்கள் வளாகத்திற்குள் உருவாகும் கழிவுகளை செயலாக்கம் செய்து மறு சுழற்சி செய்வதற்கு ஏற்ப உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக்கொள்ளுமாறும், தவறும் பட்சத்தில் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 அதன் உட்பிரிவுகளின்படி சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அறிவிக்கையினை **மக்கள் செய்தி தொடர்பு அலுவலர், மக்கள் செய்தி தொடர்பு அலுவலகம், சேலம்** அவர்களின் வழியே 09.06.2023ம் தேதிய தமிழ்முரசு நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அதற்கான செலவுத் தொகை ரூ.9,639/-ஐ KAL PUBLICATIONS PVT. LTD அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.35/2017/எச்1)**

**தீர்மான எண். 383 நாள்.31.07.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

**6.** இந்நகராட்சியிலிருந்து வெளியூர்களுக்கு அஞ்சல் கடிதங்கள் அனுப்புவதற்கு அஞ்சல் வில்லைகள் தேவைப்படுகிறது. எனவே 2023-2024ஆம் ஆண்டுக்கு அஞ்சல் வில்லைகள் வாங்கி கொள்வதற்கும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1172/18/டி1)**

**தீர்மான எண். 384 நாள்.31.07.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

**7.** மேட்டூர் நகராட்சி அலுவலத்திற்கு தினசரி நாளிதழ்கள் 2023-2024ம் ஆண்டிற்கு தொடர்ந்து வாங்கி கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.50000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1172/18/டி1)**

**தீர்மான எண். 385 நாள்.31.07.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

**8.** அரசாணை எண்.107, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( தேர்தல் ) துறை, நாள்.16.10.2017 ல் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கை வரி சட்டம் **2017** ன் பிரிவு

11(2)(i) இன் கீழ் ஒளிப்பதிவுக்கான கேளிக்கை வரியை நீக்கியும், திரையரங்குகளில் திரையிடப்படும் ஒவ்வொரு திரைப்படங்களுக்கும் வசூலாகும் மொத்த தொகையில் கீழ்க்கண்டுள்ள சதவிகிதத்தின் படி கேளிக்கை வரியை வசூலிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| விவரம் | தமிழ் படங்கள் | இதர இந்திய மொழிப் படங்கள் | ஆங்கிலம் மற்றும் இதர அந்நிய மொழிப் படங்கள் |
|---|---|---|---|
| புதிய படங்கள் | 8 சதவிகிதம் | 15 சதவிகிதம் | 20 சதவிகிதம் |
| பழைய படங்கள் | 7 சதவிகிதம் | 10 சதவிகிதம் | 14 சதவிகிதம் |

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(ந.க.எண்.4284/2007/அ2)**

**தீர்மான எண். 386 நாள்.31.07.2023**

**பதிவு செய்யப்பட்டது.**

**9.** மேட்டூர் நகராட்சியில் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகளை 2020–2021 முதல் 2022–2023 முடிய மூன்றாண்டுகளுக்கு தனியார் மூலம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டு அதன் படி M/s.KPS Engineering Construction மேட்டூர் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு தொடர்ந்து பணி செய்யப்பட்டு வந்தது ஒப்பந்த காலம் முடிவடைந்த பின்னர் தொடர்ந்து ஒப்பந்த பணி செய்ய கால அவகாசம் நீட்டித்து வழங்கப்பட்டுள்ளது. மேற்படியாருக்கு இறுதியாக நகர்மன்ற தீர்மான எண்.291 நாள்.28.04.2023ன் படி ஏப்ரல் 2023 முதல் செப்டம்பர் 2023 வரை முடியவுள்ள காலத்திற்கு மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர் திரு.தியாகராஜன் காலமானதால் அன்னாரின் மனைவி திருமதி.சுதா என்பவருக்கு கால நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் திருமதி.சுதா, 21.07.2023ந்தேதிய கடிதத்தில் தொடர்ந்து தன்னால் மேற்படி பணியினை செய்ய இயலாது என தெரிவித்துள்ளார். எனவே இப்பணி அத்தியாவசிய பணி என்பதாலும் அக்டோபர் 2023 முதல் தொடர்ந்து பணி செய்ய வேண்டி இருப்பதாலும் உடனடியாக இப்பணிக்கு திட்டப்பிரேரனைகள் மற்றும் மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தபுள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4495/2016/இ1)**

**தீர்மான எண். 387 நாள்.31.07.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

**10.**மேட்டூர் நகராட்சி பழைய குடிநீர் விநியோக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.77 நாள்.**31.05.2019–**ன்படி அனுமதி பெற்று சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநராக முதுநிலைப் பொறியாளரின் **21.11.2019–**ம் தேதிய ந.க.எண்.**23651/2013/DO1** கடிதத்தின்படி அனுமதி வழங்கப்பட்டு **05.02.2020** முதல் **04.02.2021** முடிய திரு.K.கோவிந்தன்,ஓமலூர்ஒப்பந்ததாரர் மூலம் பழைய குடிநீர் விநியோக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்யப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தக்காலம் **04.02.2021**ல் முடிவடைந்ததால் மீண்டும் பழைய குடிநீர் விநியோக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள **03.12.2021**ல் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு திட்டபிரேரனை

அனுப்பப்பட்ட நிலையில் அவசர அவசியம் கருதி இந்நகர் மன்ற தீர்மான எண்.22 நாள்.10.02.2021–ன்படி 05.02.2021 முதல் 04.02.2022 முடிய உள்ள காலத்திற்கு ஒப்பந்தகாலம் நீட்டிப்பு செய்யப்பட்டது. மேற்படி ஒப்பந்தக்காலம் 04.02.2022–ல் முடிவடைந்ததால் இந்நகர்மன்ற தீர்மான எண்.93 நாள்.28.07.2022ன் படி 01.08.2022 முதல் 31.01.2022 வரை ஒப்பந்தகாலம் நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டுள்ளது. மேலும் 31.01.2022 உடன் ஒப்பந்தகாலம் முடிவடைந்ததால் அவசர அவசியம் கருதி இந்நகர் மன்ற தீர்மான எண்.219 நாள்.31.01.2023ன் படி 01.02.2023 முதல் 30.06.2023 வரை ஒப்பந்தகாலம் நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் 30.06.2023 உடன் மேற்படி பணிக்கான ஒப்பந்தகாலம் முடிவடைவதாலும் திரு.K.கோவிந்தன் ஒப்பந்ததாரர் 21.06.2023ந் தேதிய கடிதத்தில் பழைய ஒப்பந்தபுள்ளி விலைவிகிதத்தின் படியே பணியை மேற்கொள்ள சம்மந்தம் தெரிவித்துள்ளதாலும், 01.07.2023 முதல் 31.12.2023 வரை பழைய குடிநீர் விநியோக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள திரு. K.கோவிந்தன், ஒப்பந்ததாரருக்கு பணி ஒப்பந்தகாலத்தை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி பழைய குடிநீர் விநியோக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள திரு. K.கோவிந்தன், ஒப்பந்ததாரருக்கு பணி ஒப்பந்தகாலத்தை நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.914/2019/இ1)**

**தீர்மான எண். 388 நாள்.31.07.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

**11.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஒவ்வொரு ஆண்டும் ஆடி 18 பண்டிகை கொண்டாடப்படுகிறது. இந்நகராட்சி வருவாய் ஆய்வாளரின் 25.07.2023ந் தேதிய அறிக்கையில் மேற்படி பண்டிகைக்கு வரும் பொதுமக்கள் இருசக்கர, கார் மற்றும் கனரக வாகனங்களை நிறுத்தம் செய்ய கோட்டாட்சியர் மேட்டூர் அவர்களின் தலைமையில் 25.07.2023 அன்று நடத்தப்பட்ட ஆடி 18 விழாவிற்கான முன்னேற்பாடு கூட்டத்தில் அரசு மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்திலும் மற்றும் பொன்னகர் நகராட்சி துவக்கப்பள்ளி மைதானத்திலும் நிறுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் படி மேற்படி இடத்தில் வாகனங்கள் நிறுத்தம் செய்பவர்களிடம் கட்டணம் வசூலிக்கவும், பொது ஏலம் நடத்தப்பட வேண்டும். எனவே (03.08.2023 ) அன்று இருசக்கர வாகனம், கார் மற்றும் கனரக வாகனங்கள் நிறுத்தம் செய்பவர்களிடம் கட்டணம் வசூலிக்கவும் பொது ஏலம் நடத்திடவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதியும், நகராட்சியின் வருமானத்தை அதிகரிக்கும் பொருட்டும் நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று குறுகிய கால பொது ஏல நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 2288 / 2023/அ2)**

**தீர்மான எண். 389 நாள்.31.07.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

**12.** சேலம் மாவட்ட ஆட்சியரின் அவர்களின் ந.க.எண்.154/செ.ம.தொ.அ/2022 நாள்.06.07.2022ன்படி மேட்டூர் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் பற்றி 30.08.2022ந் தேதிய மாலைமலர் நாளிதழில் விளம்பரம் செய்ததற்காண செலவினப் பட்டியல் தொகை ரூ.9900/– வழங்க கோரி மலர் பப்ளிகேசன் பிரைவேட் நிறுவனத்தின் விளம்பர மேலாளரின் 29.08.2022ந் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி விளம்பர தொகை ரூ.9900/–யை மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1743/2021/இ1)**

**தீர்மான எண். 390 நாள்.31.07.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

13. மேட்டூர் நகராட்சியில் நடப்பு நிதியாண்டில் 2022-2023 அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோக மேம்பாட்டு பணிக்காக ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் 17.11.2022 அன்று தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழ்களில் வெளியிடப்பட்டுள்ளதற்கு மேட்டூர் நகராட்சிக்கான விளம்பர தொகை ரூ.47193/-ஐ Bright Advertising No.13, Moores Road Thousand Lights, Chennai அவர்களுக்கு வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 10.01.2023ந் தேதிய ந.க.எண்.26467/2022/ அம்ரூத் 1 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி விளம்பர தொகையினை பொது நிதியிலிருந்து வழங்கலாம்

**(ந.க.எண்.2033/2022/இ1)**

**தீர்மான எண். 391 நாள்.31.07.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

14. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண்.(4D)26 நாள்.20.07.2023ன்படி மேட்டூர் நகராட்சியில் வார்டு எண்.18 தூக்கனாம்பட்டி பகுதியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022-23ன் கீழ் அறிவுசார் மையம் (Knowledge center) அமைப்பதற்கு ரூ.198.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேலும் மேற்படி பணியினை செய்ய தொழில்நுட்ப அனுமதி மற்றும் ஒப்பந்தபுள்ளி படிவத்திற்கு உரிய அனுமதி பெற நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| S.No | Name of the Municipality and District | Construction of knowledge Center | Project cost approved by CPSMC(Rs.in.crore) | KNMT share |
|---|---|---|---|---|
| 1 | Mettur Municipality Salem District | At ward No.18, Survey No.49, T.S.No.149 (Thookkanampatty) | 1.95 | 1.95 |

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1666/2022/இ1)**

**தீர்மான எண். 392 நாள்.31.07.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

15. மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தியதின் படி மேட்டூர் நகராட்சியில் நகரின் பொதுமக்கள் கூடும் இடங்களில் அரசு செயல்படுத்தப்படும் திட்டங்கள்

குறித்து விளம்பர பதாகைகள் அமைக்க இந்நகர்மன்ற தீர்மான எண்.290 நாள்.28.04.2023ன் படி அனுமதிக்கப்பட்டு 10.07.2023ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | திரு.K.கோவிந்தன்<br>பூசாரிப்பட்டி, ஓமலூர் | ரூ.15500/- |
| 2 | M/s.GPS & CO<br>பூசாரிப்பட்டி, காடையாம்பட்டி | ரூ.15100/- |
| 3 | ஸ்ரீ சிவசக்தி விநாயகா கன்ஸ்ட்ரக்சன்<br>வெள்ளாளப்பட்டி,<br>மல்லி குந்தம்(அ)மேட்டூர் | ரூ.14680/- |

அலுவலக குறிப்பு

மேற்கண்டவாறு பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண்.3ல் கண்டுள்ள ஸ்ரீ சிவசக்தி விநாயகா கன்ஸ்ட்ரக்சன், வெள்ளாளப்பட்டி என்பவரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.1240/2023/இ1)**

**தீர்மான எண். 393 நாள்.31.07.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

**16.** மேட்டூர் நகராட்சியில் 15வது மத்திய நிதி குழு 2023-2024ன் கீழ் (Untied) மேட்டூர் நகராட்சிகுட்பட்ட பகுதியில் சிமெண்ட் கான்கீரீட் சாலை அமைக்கும் பணிக்கு 14.07.2023 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | M/S VPM Projects,<br>Salem | **625976** | **(–)0.54** % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | Thiru.K.Govindhan,<br>Poosaripatty,Salem | **6175768** | (+) **0.04**% மதிப்பீட்டை விட குறைவு |

## அலுவலக குறிப்பு

மேற்படி பெறப்பட்ட இரு ஒப்பந்தபுள்ளிகளில் **(–) 0.04**% மதிப்பீட்டை விட குறைவாக அளித்துள்ள திரு.கே.கோவிந்தன், பூசாரிபட்டி அவர்களின் ஒப்பந்தபுள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண். 2119/2023/இ1)**

**தீர்மான எண். 394 நாள்.31.07.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

17. மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை திருவாளர்.P&B Enterprises மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில்

ஒப்பந்தகாலம் 31.12.2021ல் முடிவுற்றதாலும் தெருவிளக்கு இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளின் நீட்டிப்பு காலம் 31.05.2023ல் முடிவடைவதால் பணியின் அவசர அவசியம் கருதி மீண்டும் காலநீட்டிப்பு செய்ய ஒப்பந்ததாரர் அளித்த 15.05.2023 ஒப்புதல் கடிதத்தின் மூலம் ஒப்பந்தபுள்ளியில் உள்ள விலை விகிதத்தின் படி ஜீன், ஜீலை மற்றும் ஆகஸ்ட் (2023) ஆகிய மூன்று மாதங்கள் பணியினை மேற்கொள்ள பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 2312/2019/இ1)**

**தீர்மான எண். 395 நாள்.31.07.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

**18.** நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றத் தலைவருக்கு மாதந்தோறும் வழங்கப்படும் மதிப்பூதியம் ரூ.**15,000/–**மும், நகர்மன்ற துணைத் தலைவருக்கான மதிப்பூதியம் ரூ.**10,000/–**மும் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களுக்கான மதிப்பூதியம் ரூ.**5,000/–** மும் வழங்க அரசாணை (நிலை) எண்.98, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( தேர்தல் ) துறை, நாள்.13.07.2023 ன்படி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(ந.க.எண். 2142/2022/இ1)**

**தீர்மான எண். 396 நாள்.31.07.2023**

**பதிவு செய்யப்பட்டது.**

**19.** மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட அணை முனியப்பன் கோவில், மேட்டூர் அணை பூங்கா மற்றும் காவேரி கரையோர பகுதிகளில் ஆடி **18**யை முன்னிட்டு ,புனிதநீராட அருகில் உள்ள மாவட்டங்களில் உள்ள பொதுமக்கள் சுமார் **100000** பேர் வருகை புரிவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.எனவே ஆடி **18** பண்டிக்கைக்கு புனித நீராட வரும் பொதுமக்கள் உடை மாற்ற ஏதுவாக தடுப்புகள்,நீரோட்டம் அதிகம் உள்ள பகுதிகளில் நீராட தடை செய்ய தடுப்புகள், எச்சரிக்கை பதாகைகள், காவேரி பாலம் முதல் முனியப்பன் கோவில் வரை FOCUS மற்றும் FLOOD LIGHT பொருத்த வேண்டிய அவசியம் உள்ளது. இப்பணிகளை மேற்கொள்ள உத்தே செலவினம் ரூ.**4.00**இலட்சம் ஆகும்.இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பணியின் அவசரம் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.2303/2023/இ1)**

**தீர்மான எண். 397 நாள்.31.07.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

20. மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட நீரேற்றம் நிலையத்தில் **60**HP MOTOR UNIT NO.2ன் மோட்டார் பேரிங் மற்றும் Technical Plant பழுதடைந்துள்ளது.மேற்படி பழுதுகளை சரிசெய்ய உத்தேச செலவினம் ரூ.**150000**/ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2141/2023/இ1)**

**தீர்மான எண். 398 நாள்.31.07.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

**21.** மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட நீரேற்றம் நிலையத்தில் 120HP MOTOR UNIT NO.1ன் SHAFT மற்றும் STARTER பழுதடைந்து இயக்க இயலாத நிலையில் உள்ளதால் மேற்படி பழுதுகளை சரிசெய்ய இயலாததினால் புதிதாக பொருத்த உத்தேச செலவினம் ரூ.550000/ ஆகும்.இச்செலவினத்தை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2142/2023/இ1)**

**தீர்மான எண். 399 நாள்.31.07.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

(ஒப்பம்)...திருமதி.கோ.சந்திரா
நகர்மன்ற தலைவர்
மேட்டூர் நகராட்சி

/உண்மை நகல் /

ஆணையாளருக்காக
மேட்டூர் நகராட்சி.